மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்

அசல் வழக்கு எண்.201/2011

2026 ம் ஆண்டு ஜனவரி 21 ம் நாள் புதன்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மனோகரன் | தொழில் | |
| த/பெ | | ஊர் | |
| வயது | | தாலுாக்கா | காங்கேயம் |
| மதம் | இந்து | மாவட்டம் | திருப்பூர் |

21.01.2026 பி.வா.சா.5 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டு 9, 33, 26 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

1. எனது தகப்பனார் 20 ம் பிரதிவாதி பொன்னுச்சாமி என்றால் சரிதான். 20 ம் பிரதிவாதி இந்த வழக்கில் எதிர்வழக்குறை தாக்கல் செய்துள்ளார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எனது தகப்பனாரான 20 ம் பிரதிவாதி இறந்ததற்கு பின்னிட்டு அவரின் வாரிசுகளாக எங்களை இந்த வழக்கில் 38 முதல் 40 பிரதிவாதிகளாக கட்சி செய்துள்ளார்கள் என்றால் சரிதான். வழக்குரையை நான் படித்து பார்த்தேனா என்றால் ஆமாம்.

2. அதில் தாவா சொத்தின் விஸ்தீரணம் எவ்வளவு என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் மொத்தம் 93 ஏக்கர் 27 செண்ட். அதில் பொதுவில் 18 ஏக்கர் 65 செண்ட் என்று சொல்லப்பட்டுள்ளதா என்றால் ஆமாம் அதில் பொதுவில் 13 ஏக்கர் 98 –3/4 செண்ட் என்று

சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த 13 ஏக்கர் 98 –3/4 சென்ட் நிலத்தை பொருத்து தான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் ஆமாம். நான் பொதுவில் உள்ளதாக சொல்லும் 13 ஏக்கர் 98 –3/4 சென்ட் சென்ட் நிலத்திற்கான செக்கு பந்தியை என்னால் சொல்ல முடியுமா என்றால் முடியாது. அந்த 13 ஏக்கர் 98 –3/4 சென்ட் சென்ட் நிலத்திற்கான ரீ சர்வே எண் என்னால் சொல்ல முடியுமா என்றால் சொல்ல இயலாது.

3. நான் 1971 ஆம் ஆண்டு பிறந்தேன் எனது முன்னோர் பொன்னுச்சாமி தாவா சொத்தில் பொதுவில் எப்போது கிரையம் வாங்கினார் என்றால் 1971ல் கிரையம் வாங்கினார். அந்த கிரயத்தில் எனது தகப்பனார் மற்றும் 3 நபர்கள் சேர்ந்து கிரயம் வாங்கினார்கள் என்றால் சரிதான் மேற்படி 1971 ல் 13 ஏக்கர் 98 –3/4 சென்ட் பூமிக்கான செக்குபந்தி எதுவும் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். நான் 93 ஏக்கர் 27 சென்ட் பூமி பொதுவில்தான் இருந்து வருகிறது என்று சொல்கிறேன் என்றால் ஆமாம்.

4. மேற்படி 93 ஏக்கர் 27 சென்ட் பூமியில் யார் யாருக்கு எவ்வளவு பாகம் உள்ளது என்பதை பொறுத்து என்னால் சொல்ல முடியுமா என்றால் முடியாது. எனது பாகத்தை பொறுத்து மட்டும்தான் என்னால் சொல்ல முடியும். தாவா சொத்தான பழைய க.ச.எண்.480 முதல் 489 வரையிலான புல எண்களில் உள்ள பூமிகள் எவ்வாறு அனுபவம் செய்யப்பட்டு வந்தது என்றால் பொதுவில் வைத்து தான் அனுபவம் செய்யப்பட்டு வந்தது. 1971 கிரய ஆவணத்தின் அடிப்படையில் எனது

முன்னோர்கள் தாவா சொத்தில் எந்த பகுதியில் சுவாதீனம் வாங்கினார்கள் என்றால் அவ்வாறு பத்திரத்தில் எதுவும் எழுதப்படவில்லை.

5. பொதுவில் கிரயம் வாங்கி இருந்தால் 12 ஆண்டுகளுக்குள் சட்டப்படி பாகம் செய்து கொள்ள வேண்டும் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. 1986 இல் ரிசர்வே நடந்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அப்போது என் தகப்பனார் இருந்ததால் அந்த விபரம் எனக்கு தெரியவில்லை என்றால் சரிதான். லோகநாதன் லோகநாதனின் மக்களான செந்தில்குமார், சந்திரசேகரன் ஆகியோர்கள் தாவா சொத்தில் எந்த பகுதியில் கிரயம் வாங்கினார்கள் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

6. என்னிடம் காட்டப்படும் வழக்குரையில் சொத்து விபரத்தில் கண்டுள்ள ஒன்பது காலைகளிலும் மொத்த விஸ்தீரணம் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான் நான் தாக்கல் செய்துள்ளேன். என் தகப்பனார் கிரையம் பெற்ற பி.வா.சா.ஆ.19 ஆவணத்தில் அனைத்து காலை எண்களையும் சேர்த்து 18 ஏக்கர் 65 சென்ட் என குறிப்பிடப்பபட்டு உள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.19 ஆவணத்தில் கண்டுள்ள 18 ஏக்கர் 65 சென்ட் பூமிக்கு அந்த ஆவணத்தில் செக்பந்து எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

7. 26 ஆம் பிரதிவாதியான ஈரோடு லோகநாதன் என்பவர் பெற்றுள்ள பொது அதிகாரம் குறித்து எனக்கு தெரியாது என்றால் சரிதான். மேற்படி

26 வது பிரதிவாதி பொது அதிகார ஆவணத்தின் மூலம் பொன்னுச்சாமி என்பவர் தாவா சொத்தில் கொடுத்த பூமியை லட்சுமி நகர், சரஸ்வதி நகர் என பிளாட்டுகள் பிரித்து விற்பனை செய்து உள்ளார் என்று சொன்னால் அது எனக்கு தெரியாது. அதில் செந்தில்குமார் எவ்வளவு சென்ட் நிலத்தை கிரையம் வாங்கி உள்ளார் என்பதும் சந்திரசேகர் எவ்வளவு நிலத்தை கிரயம் வாங்கியுள்ளார் என்ற விவரமும் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. ரிசர்வையில் பங்குதாரர்கள் எவ்வாறு அனுபவம் செய்து வந்தார்களோ அந்த அடிப்படையில் உட்பிரிவுகள் செய்யப்பட்டு விட்டது என்று சொன்னால் சரியல்ல.

8. இந்த வழக்கில் கண்ட சொத்தைப் பொறுத்து மறு நில அளவையில் ஏற்பட்ட உட்பிரிவுகள் குறித்து நான் இது வரை ஏதேனும் ஆட்சேபணை செய்துள்ளேனா என்றால் இல்லை. பொது அதிகார ஆவணத்தின் மூலம் உரிமை வழங்கப்பட்ட சொத்தை தனிப்பட்ட முறையில் அனுபவம் செய்வதற்கும், அதை வில்லங்கம் விற்கிரையத்திற்கு உட்படுத்தவும் உரிமை உள்ளது என்று சொன்னால் சரியல்ல.

9. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் கட்டளை சங்கதிகள் உண்மையா என்றால் ஆமாம். அதில் வாதியின் வழக்கை செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று நான் சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்தை வாய்வழியாக அனுபவம் செய்து கொண்டு அனுபவம் செய்து வருவதை ஒப்புக்கொண்டு நாங்கள் எங்கள் பாகத்தை தனிப்பட்ட முறையில்

அனுபவம் செய்து வருகிறோம் என்றும், அதனால் இந்த பாகப்பிரிவினை வழக்கு நிலைக்கதக்கது அல்ல என்றும் சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் சரிபார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கைரேகை செய்தும்/கையொப்பம் செய்தும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

K S MALATHI

Digitally signed by K S MALATHI
Date: 2026.01.21 18:56:48 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்